Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CMP.NO.7051/2024
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.3 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ராஜமணிக்கம் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | புதுப்பேட்டை | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 07 day of January 2025.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சின்னவெங்காய பள்ளியில் உள்ள மருத்துவர் வாசுதேவன் இடத்தில வீடு கட்டிக் கொண்டிருந்தார்கள். அதை பார்ப்பதற்கு நானும் மருத்துவர் வாசுதேவனும் சென்றோம். மார்ச் 8, 2024 காலை 11.00 அளவில் மகேந்திரா கார் மற்றும் JCB எடுத்துக் கொண்டு பொது பணி திலகம் மற்றும் 9 பேர் வந்தார்கள். வந்தவர்கள் கத்தி, கம்பு, எடுத்து வந்தார்கள். வேலை செய்யாதீர்கள் என்று பொது பணி திலகம், சிவா, சங்கர், தியாகு, சுந்தரராஜன், கோபி மற்றும் 4 பேர் பெயர் தெரியவில்லை. ஆகிய அனைவரும் தடுத்தார்கள். மீறி வேலை செய்தால் இங்கேயே வெட்டி விடுவோம் என்று மிரட்டினார்கள். அதனால் அங்கிருந்து வந்துவிட்டோம். வாசுதேவன் மட்டும் பொது பணி திலகத்துடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது பொது பணி திலகம் JCB ஒட்டுநரை அழைத்து அங்கு கட்டியிருந்த கட்டிடத்தை இடிக்க சொன்னார். அதனால் அங்கிருந்ததை இடித்து தள்ளிவிட்டு அங்கிருந்த பொருட்களை எடுத்து சென்றுவிட்டனர். கேட் வைத்திருந்ததை நோண்டி எடுத்து சென்றுவிட்டார்கள். இது சம்பந்தமாக புகார் கொடுக்க ஜோலார் பேட்டை காவல் நிலையம் சென்றோம். அப்போது ஆய்வாளர் வெளியே சென்றிருப்பதாக கூறினார்கள். மறுநாள் வர சொல்லி அனுப்பிவிட்டார்கள். மறுநாள் காலை 11.00 சென்று அப்போது CSR Copy மட்டும் கொடுத்தார்கள். மருத்துவர் FIR போடும்படி சொன்னார். அப்போது ஆய்வாளர் எல்லாம் என்கது

தெரியும் நீங்கள் போங்கள் என்று சொன்னார். அதன்பின்னர் போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விசாரணையும் செய்யவில்லை. அதனால் ஆய்வாளர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

Signature of Witness.